HRC

# மனித உரிமை மாணவர் மன்றம்

# அகில உலக மனித உரிமைப் பிரகடனம் - 1948

## (Universal Declaration of Human Rights - UDHR)

### "அனைத்து உரிமைகளும் அனைவருக்கும் உரியதே"

1948 ஆம் ஆண்டு டிசம்பர் 10 ஆம் நாள், மனித உரிமை பற்றிய உலகப் பிரகடனம் உருவாயிற்று. வரலாற்றுச் சிறப்புமிக்க இப்பிரகடனத்தின் மதிப்பீடுகளை உள்வாங்கும் வகையில் எளிய தமிழில் சுருக்கித் தரப்படுகிறது.

இப்பிரகடனத்தின் உள்ளடக்கம் மனித மாண்பு, சுதந்திரம், சமத்துவம், அமைதி என்பனவையே. இவை வெறும் சொற்களல்ல வாழ்விற்கான மதிப்பீடுகள், சமூகத்தின் ஒவ்வொரு தனி மனிதனும், நியதியாக ஏற்றுக் கொள்ள வேண்டுமெனில், அய்க்கிய நாட்டவையில் அங்கம் வகிக்கும் அனைத்து நாடுகளும், தம் மக்களிடம் கல்வி மற்றும் ஊடகங்கள் மூலமும் பரப்புரை செய்ய வேண்டுவது காலக்கட்டாயமாகிறது. தளராமல் தொடர்ந்து செய்யப்படும் இம்முயற்சியில், மனித உரிமைகளும், மானுட மாண்பும் சுதந்திரங்களும் வளர்க்கப்பெறும் என்பது உறுதி.

### பாகுபாடு மனித உரிமை மீறலே

பிரிவு 1



உரிமைகள், சுதந்திரங்கள் அனைத்தும் நிறம், பால், மொழி, சமயம், அரசியல் கோட்பாடு, தேசம், சமுதாயப் பின்னணி, சொத்து, பிறப்பு, தகுநிலை (Status) எனும் அடிப்படையில் பாகுபாடின்றி அனைவருக்கும் உரியன.

மேலும் ஒருவர் சார்ந்த நாடு, இறையாண்மையோடு கூடிய சுதந்திர நாடாக இருந்தாலும் அல்லது சார்புடைய நாடாக இருந்தாலும் இவ்வடிப்படையிலும் பாகுபாடுகாட்டக் கூடாது.

வேற்றுமைகள் இயல்பானவை என்போம். பாகுபாடுகளை மீறல்கள் என்போம். வேற்றுமையுள்ளும் பன்மையை வளர்த்தல் மூலம் ஒற்றுமை காண்போம்.

### சகோதரத்துவம்

பிரிவு 2



உலகில் பிறக்கும் மனிதர் அனைவரும் சுதந்திரத்தோடும், சுயமரியாதையோடும் உள்ளார்ந்த உரிமைகளோடும் பிறக்கின்றனர். இவர்கள் அனைவருமே பகுத்தறிவும் மனசாட்சியும் இயல்பிலேயே பெற்றவர்கள். எனவே மக்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் சகோதரத்துவ உணர்வோடு நடந்து கொள்ள வேண்டும்.

## ‘உயிர்’க்கான உரிமை

பிரிவு 3

ஒவ்வொருவருக்கும் உயிர்வாழவும், இவ்வாழ்வைச் சுதந்திரத்தோடும் பாதுகாப்போடும் வாழ்வதற்கும் உரிமையுண்டு.



## ‘அடிமை’–இனியில்லை

பிரிவு 4



யாரும் யாரையும் அடிமையாகக் கொள்ளவோ நடத்தவோ உரிமை இல்லை. அடிமை முறைகளின் அத்தனை வடிவங்களும் தடை செய்யப்பட வேண்டும்.

## ‘சித்ரவதை’யற்ற உலகு



பிரிவு 5

யாரையும் சித்திரவதை செய்யக்கூடாது. கொடூரமாக, மனிதத் தன்மையற்று கேவலமாக நடத்தக் கூடாது. கொடூரமான, மனிதத் தன்மையற்ற, கேவலமான தண்டனைக்கு உட்படுத்தக் கூடாது.

## ‘ஆள்’ என்போம்

பிரிவு 6

ஒவ்வொருவரும் எவ்விடத்திலும் சட்டத்தின் முன் ஓர் ஆள் (*Person*) என்ற நிலையில் சமமாக ஏற்றுக் கொள்ளப்படுதற்கு உரிமையுடையோர்.





## சட்டத்தின் முன் ‘சமம்’

பிரிவு 7

அனைவரும் சட்டத்தின் முன் சமமானவர்கள்; சட்டத்தின் சமமான பாதுகாப்புக்குரியவர்கள். மனிதரிடமிருந்து மனிதரைப் பாகுப்படுத்துதல் அல்லது பாகுபடுத்த தூண்டுதல் என்பவற்றிலிருந்து பாதுகாப்புப் பெறுகின்ற உரிமை அனைவர்க்கும் உண்டு.

## ‘நீதி’பெறும் உரிமை



பிரிவு 8

ஒரு நாட்டின் அரசியல் சாசனமும், சட்டங்களும் வழங்கும் அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்ற போது, அந்நாட்டின் நீதிமன்றங்களின் மூலம் தக்க பரிகாரம் பெறும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு.

பிரிவு 9

## ‘கைது’க்குக் காரணம்



சரியான காரணமின்றி சட்டத்திற்குப் புறம்பாகக் கைது செய்யவோ, சிறைப்படுத்தவோ, நாடு கடத்தவோ எவருக்கும் உரிமையில்லை.



## ஒளிவு மறைவற்ற விசாரணை

பிரிவு 10

ஒருவர்க்குரிய உரிமைகளையும், கடமைகளையும் தீர்மானிக்கின்ற போதும், ஒருவர்க்கு எதிராக ஏற்கனவே குற்றச் சாட்டுகள் இருந்தாலும் சுதந்திரமான நீதிமன்றங்கள் மூலம் வெளிப்படையான விசாரணையைக் கோருவதற்கு ஒவ்வொரு குடிமகனுக்கும் உரிமையுண்டு.

நீதிவிசாரணைகள் வெளிப்படையாக அமைதல் வேண்டும். விசாரிக்கும் நீதிபதி புற உலக நிர்ப்பந்தத்திற்கு ஆளாகிவிடக் கூடாது.

## குற்றவாளி யார்?

பிரிவு 11



தண்டனைக்குரிய குற்றம் புரிந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டதாலேயே ஒருவர் குற்றவாளியாவாரா? இல்லை! ஒளிவு மறைவற்ற நீதிமன்றங்களால் விசாரிக்கப்பட்டு குற்றவாளியென்று சட்டப்படி நிரூபணமாகும் வரை அவர் குற்றமற்றவரே. குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் தனது பாதுகாப்பிற்கான உத்தரவாதங்களைக் கோரவும் உரிமையுண்டு. ஒருவர் செய்யாத குற்றத்திற்காக ஒருவரைப் பழிக்கவோ தண்டனை வழங்கவோ யாருக்கும் உரிமை இல்லை.



## அந்தரங்கமும் உரிமையே

பிரிவு 12

ஒருவரின் அந்தரங்கம், குடும்பம், இல்லம், கடிதங்கள்–இவற்றில் சட்டத்திற்குப் புறம்பாகக் குறுக்கீடு செய்ய எவருக்கும் உரிமையில்லை. ஒருவரின் மாண்புக்கும், நற்பெயருக்கும் களங்கம் கற்பிக்க எவருக்கும் உரிமை இல்லை. இம்மாதிரியான முறையற்ற குறுக்கீடுகளிலிருந்து பாதுகாப்பு பெற அனைவர்க்கும் உரிமை உண்டு.

பிரிவு 13

## போய்வர, குடியேற. . .



சொந்த நாட்டினுள் விரும்பியவாறெல்லாம் போய் வரலாம். சொந்த நாட்டை விட்டு இன்னொரு நாட்டிற்குக் குடி பெயரலாம். ஒருவர் விரும்புகின்ற போது மீண்டும் சொந்த நாட்டிற்குத் திரும்பாலம்.

பிரிவு 14




## தஞ்சம் புக

ஒருவர் தம் நாட்டில் தாங்க முடியா கொடுமைகளுக்கு உள்ளாவாராயின், இன்னொரு நாட்டில் தஞ்சம் புக உரிமையுண்டு. ஆனால் கொலைக் குற்றம் புரிந்த ஒருவரோ, அய்க்கிய நாட்டுச் சபையின் நோக்கங்களுக்குப் புறம்பாக நடக்கும் ஒருவரோ எங்கும் தஞ்சம் புக உரிமை இல்லை.



## தேசிய இனவுரிமை

பிரிவு 15

ஒருவர்க்கு ஒரு நாட்டைச் சார்ந்தவராக இருப்பதற்கு உரிமையுண்டு. ஒருவரின் தேசிய இன அடையாளத்தைப் பறிக்க யாருக்கும் உரிமை இல்லை. ஒருவர் தான் சார்ந்த தேசிய இன அடையாளத்தை மாற்றிக் கொள்ள விரும்பினால், மாற்றிக் கொள்ளவும் உரிமையுண்டு

# திருமணமும் உரிமையே

பிரிவு 16



உரிய வயதடைந்த ஆண்களும், பெண்களும் மணம் புரிந்து கொள்ளவும் குடும்பம் அமைத்துக் கொள்ளவும் உரிமையுண்டு. ஒருவர் சார்ந்த இனம், தேசிய இனம், சமயம் ஆகியன இவ்வுரிமைகளுக்குத் தடையாய் இருக்கக். கூடாது. திருமண உறவுக்கான உரிமை போலவே, திருமண உறவை ரத்து செய்யுவும் ஆணுக்கும், பெண்ணுக்கும் சம உரிமை உண்டு. திருமணத்தில் யாருடைய வற்புறுத்தலுக்கும் இடமில்லை. ஒருவர் சார்ந்த நாட்டின் அரசுக்குக் குடும்பங்களையும், குடும்ப உறுப்பினர்களையும் பாதுகாக்கும் கடமையுண்டு.

பிரிவு 17

## சொத்துரிமை



தனித்தோ, பிறரோடு சேர்ந்தோ சொத்து வைத்துக் கொள்ளும் உரிமை அனைவர்க்கும் உண்டு. முறையான காரணமின்றி ஒருவர் சொத்தினைப் பறிக்கும் உரிமை யாருக்குமில்லை.

பிரிவு 18

## சிந்தனையும் மதங்களும் உரிமைகளே



ஒவ்வொருவருக்கும் சிந்திக்க, மன சாட்சிப்படி நடக்க, ஒரு மதத்தைத் தெரிவு செய்ய அல்லது தேர்ந்து கொண்ட மதத்தை மாற்றிக் கொள்ள உரிமையுண்டு. மத நம்பிக்கைகளைத் தனியாக அல்லது குழுவாக அந்தரங்கமாக அல்லது வெளிப்படையாகப் போதிக்கவும் கடைபிடிக்கவும் வழிபடவும் உரிமையுண்டு.

## கருத்துரிமை

பிரிவு 19

ஒவ்வொருவரும், தங்களுடைய கருத்துக்களைப் பேச்சு மூலமோ, எழுத்து மூலமோ வெளிப்படுத்த உரிமையுண்டு. அவ்வாறே தகவல்களைப் பெறுவதற்கும், பெற்ற தகவல்களைப் பரிமாறிக்கொள்ளவும் பரப்புதற்கும் உரிமையுண்டு. இந்தகவல்கள் தேச எல்லை தாண்டி சர்வதேச அளவிலும் அமையலாம்.




பிரிவு 20


## ‘சங்கம்’ அமைக்கலாம்



ஒவ்வொருவரும், அமைதியான முறையில் கூட்டமாகக் கூடவும், சங்கமைக்கவும் உரிமையுண்டு. ஆனால் சங்கத்தில் சேரும்படி எவரையும் கட்டாயப்படுத்த முடியாது.

பிரிவு 21


# ஆட்சியிலும் பங்கு



நாட்டின் அரசதிகாரத்தில் நேரடியாகவோ சுதந்திரமாகத் தேர்ந்தெடுக்கும் பிரதிநிதிகள் மூலமாகவோப் பங்கேற்க உரிமையுண்டு. அரசுகள் மக்களின் நம்பிக்கையைத் தேர்தல்கள் மூலம் தொடர்ந்து பெற வேண்டும்; இத்தேர்தல்கள் இரகசியமாக இருத்தல் வேண்டும். வாக்குரிமை எல்லோர்க்கும் சமமாக இருத்தல் வேண்டும். தன் நாட்டின் அரசுப் பணியில் சமவாய்ப்பு பெறும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு.. மக்களும் அரசும் ஒருவர்க்கொருவர் பதில் சொல்லும் கடப்பாடுண்டு என்பதும் மிகப் பெரிய கடமையாகும்.

# சமூகப் பாதுகாப்பு

பிரிவு 22



சமூக உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் சமூகப் பாதுகாப்பிற்கான உரிமை உண்டு. குடிமகனின் மாண்பிற்கும், வளர்ச்சிக்கும் தேவையான பொருளாதார, சமூக, பண்பாட்டு உரிமைகளை நிறைவேற்றிக் கொள்ளும் உரிமை உண்டு. இப்பாதுகாப்பு நாட்டு வளம், சர்வதேச ஒத்துழைப்பு, அரசுகள் வளர்ச்சிக்காக முன்னெடுக்கும் முனைப்பு ஆகியவைகளை ஒத்து அமையும்.

பிரிவு 23

# வேலை வேண்டும் !



வேலைக்கான உரிமை, தகுதிக்கேற்ப வேலையைத் தெரிவு செய்யும் உரிமை, சாதகமான பணிச்சூழல், வேலையின்மைக்கு எதிரான பாதுகாப்புப் பெறும் உரிமை, நியாயமான ஊதியம், சமவேலைக்குச் சம ஊதியம், ஊதியத்தோடு கூடிய சமூகப் பாதுகாப்பு பெறல் போன்ற உரிமைகள் அனைவர்க்கும் உரியன. இவ்வுரிமைகளைக் காக்கும் வகையில் தொழிற்சங்கங்களை அமைத்தல். சங்கத்தில் உறுப்பினராகச் சேரல் இவையெல்லாம் மானுட உரிமைகளே.

## பிரிவு 24 ஓய்வும் உரிமையே



ஒவ்வொரு நபருக்கும் ஓய்வுக்கும், இளைப்பாறலுக்கும் உரிமையுண்டு. தொழிலாளர்களின் வேலை நேரம் வரையறுக்கப்பட வேண்டும். ஊழியர்கள் ஊதியத்தோடு கூடிய விடுமுறை பெற உரிமையுடையவர்கள்.

## பிரிவு 25 அடிப்படைத் தேவைகள் அடிப்படை உரிமைகளே



ஒவ்வொருவரும் உணவு, வீடு, உடை, மருத்துவம், சமூகப்பணி போன்ற அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்து கொள்ளக்கூடிய உரிமையுடையவர்கள். வேலையின்மை, நோய், இயலாமை, விதவை நிலை, முதுமை, வாழ்வதற்கான அடிப்படை வசதியின்மை போன்ற நிலைகளில் சமூகப் பாதுகாப்பைப் பெறும் உரிமையுண்டு. குழந்தைகளும், கர்ப்பிணிப் பெண்களும் சிறப்புக் கவனம் பெறும் உரிமையுடையவர்கள். மண உறவில் அல்லது மணவுறவுக்கப்பால் பிறந்த குழந்தையாயினும் சமமான கவனிப்புக்குரியவரே.


## பிரிவு 26 முழுமைக் ‘கல்வி’

- கல்வி பெறும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு.
  - ஆரம்பக் கல்வி கட்டாயக் கல்வியாக, இலவசக் கல்வியாக வேணடும். உயர்கல்வி அனைவரும் பெறும் வகையில் சம வாய்ப்புக்குரியதாக்கப் பெற வேண்டும்.



- கல்வி மானுட ஆளுமையின் முழு வளர்ச்சியை, மனித உரிமைகளை, அடிப்படை சுதந்திரங்களை, பன்மைச் சமூகக் குழுக்களுக்கிடையே நல்லிணக்கத்தை, சகிப்புணர்வை, நட்புணர்வை வளர்த்தலை நோக்கமாகக் கொண்டிருத்தல் வேண்டும்.
- தம் குழந்தைகளுக்கான கல்வியைத் தெரிவு செய்யும் உரிமை பெற்றோருக்கு உண்டு

## பிரிவு 27 கலையும் அறிவியலும்




சமுதாய கலாச்சார வாழ்வில் பங்கேற்கவும், கலைகளைத் துய்க்கவும், அறிவியல் வளர்ச்சி தரும் வெற்றிகளில் பங்கேற்கவும் அனைவர்க்கும் உரிமையுண்டு. ஒருவர் படைக்கும் கலை, இலக்கிய அறிவியலின் பயன்களைப் பாதுகாக்கவும் இப்பயன்களை அனுபவிக்கவும் உரிமையுண்டு.

## பிரிவு 28 'ஒழுங்கு' வேண்டும்




உரிமைகளையும், சுதந்திரங்களையும் உள்ளடக்கிய இப்பிரகடனங்கள் தேசிய அளவிலும் உலக அளவிலும் உருவாக்கப்பெறும் 'ஒழுங்கு' மூலமே சாத்தியம் என்பதனால் இவ்வொழுங்கைக் கோரும் உரிமை ஒவ்வொருக்கும் உண்டு.

## பிரிவு 29 'கடமை'யும் ஆற்றுவோம்



- ஒரு மனிதன் தான் தோன்றிய சமூகத்துக்குரிய கடமைகளை முழுமையாக ஆற்றுகின்ற போது தான் முழு மனிதனாகிறான்.
- ஒரு மனிதன் தான் பிறந்த நாட்டின் சட்டங்களை மதிக்க வேண்டும். சக மனிதர்களின் உரிமைகளை, சுதந்திரங்களை அங்கீகரிக்க வேண்டும். இங்கு
- பொது அமைதி, பொது நலன் என்பன மட்டுமே முதன்மை பெறல் வேண்டும். அமைதி, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, நேர்மை வாழ்வின் மதிப்பீடுகளாகட்டும்.

## பிரிவு 30 மதிப்போம் ! பேணுவோம் !



இவ்வுரிமைப் பிரகடனங்களுக்கு எதிராகச் செயற்படவோ, அழிக்கவோ யாருக்கும் எந்த நாட்டுக்கும் உரிமை இல்லை.

**மானுடரின் சுதந்திரத்தையும், அவர்தம் மாண்பையும் மதிப்பது சலுகையல்ல; கருணையும் அல்ல. இது ஒரு அறக்கட்டாயமே.**

– பவுலோ பிரையர் (1921-1997)

Institute of Human Rights Education IHRE

**மனித உரிமைக் கல்வி நிறுவனம்**

6, வல்லபாய் சாலை, சொக்கிகுளம், மதுரை -625002. தமிழ்நாடு

Ph:91-452-2539520 Fax: 91-452-2531874

E-Mail:ihre@pwtn.org Website: www.ihre.in / www.peopleswatch.org